Regd. M. No. 4565

# தமிழ்
# மருத்துவப் பொழில்

(TAMIL SIDDHA MEDICAL MAGAZINE)

திங்கள் வெளியீடு.

மலர் 3 | அக்டோபர் 1943 | இதழ் 10.

ஆசிரியர்:

தமிழ்ப் பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான

மாங்காடு. வடிவேலு முதலியார்.

உரிமையாளர்:

காரியக்கமிட்டியார் : சித்த மாணவர் கழகம்,

கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

Printed by P. Govindaraja Pillay at the Rudisill Press,
No. 7, Nallanna Mudaly Street, Royapettah
and Published by C. M. Raja Jegatheesan,
at Govt. School of Indian Medicine, "Hyde Park"
Poonamallee High Road, Kilpauk, Madras.

# தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 3 | அக்டோபர் 1943 | இதழ் 10


## குளிர்சுரம்

சுப்பிரமணியம் 5th year L.I.M.

சுரம் என்பது சுடுதல் என்னும் குறியை காண்பிப்பது. ஒருவன் வெப்பு நோயால் வருந்துவானாயின் அவனைப் பார்க்க வருகின்றவர்கள் உடம்பைத்தொட்டுப் பார்த்தலை யாவரும் அறிவோம். அப்பொழுது கையில் வெப்ப உணர்ச்சி ஏற்படின் சுரம் காய்கின்றது என்கிறார்கள். ஆகையால் சுரத்தில், வேறு குறிகுணங்கள் இருந்த போதிலும், உடம்பு சுடுதல் முக்கிய குறியாகத் தெரிகின்றது.

குளிர் சுரத்தில், சுரம் தொடங்கும் பொழுதே உடம்பை ஆட்டிவைக்கும்படியான குளிரும், நடுக்கலும், பற்கள் கிட்டிக்கொள்வதுமான குறிகுணங்கள் காண்கின்றன. இச்சுரத்தில் முக்கிய குணம் குளிராகையால் குளிர்சுரம் எனப்பட்டது.

இது சில வேறு பெயர்களால் குறிப்பிடப்படுகிறது. அவை மலைச்சுரம், நளிர்சுரம், மாறல் சுரம், முறைக்காய்ச்சல் என்பனவாம்.

மலை நாடுகளில் வசிப்பவர்களுக்கு இச்சுரம் அதிகமாகக் காணுவதால் மலைச்சுரம் என்றும்; குளிர் தோன்றிப்பிறகு சுரம் தோன்றுவதால் குளிர் சுரம் என்றும்; நாள் விட்டு விட்டு முறைப்படி வருவதால் முறைக்காய்ச்சல் என்றும் வழங்கப்படுகிறது.

இந்நோய் வருவதற்குக் காரணம் ஆராயுமிடத்து ஆங்கில முறைப்படி கீழ்க்கண்ட காரணங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன:—

1. கழிவு தண்ணீர் தேங்குவது.
2. அதில் கொசுக்கள் உண்டாவது.
3. அதில் ஒருவகை "அனோபிலிஸ்" (anopheles) என்ற கொசுவின் பெண் இனம் கடித்து அதனால் இரத்தம் விஷமித்துவருவது என்பன.

ஆனால் நம் இந்திய மருத்துவத்தின் வாயிலாக ஆராய்வுழி, தேரன்தைலவருக்கச் சுருக்கத்தில் கொம்பு அரக்குத் தைலம் கூறுமிடத்து, அத்தைலத்தின் மகிமையைக் கூறும் பாவில் கீழ்வருமாறு கூறியிருக்கிறார். அது

"......................உள்ளீரலுக்குட் குளிர்ந்தெழுந்தங்க வயவி யைக் குலிக்கியாட்டுங் குளிர் சுரமும்......" என்றிருப்பதால்,

(1) வயிற்றின் வலப்பக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள கல்லீரல் (யக்ருத்) என்னும் கருவியைப்பற்றி வருவது.

(2) வயிற்றின் இடப்பக்கத்திலுள்ள மண்ணீரல் என்னும் பிலீகத்தைப் பற்றி வருவது. அவ்விரு ஈரல்களுக்குள்ளும் குளிர்ச்சி அதிகப்பட்டு அக்குளிர்ச்சியின் மிகுதியால் தேகத்தின் அவயவங்களில் நடுக்கல் ஏற்படுகின்றது.

இச்சுரம் தினந்தோறும் வருதல், 2-ம் நாள் மாறல், 3-ம் நாள் மாறல், 4-ம் நாள் மாறல், 5-ம் நாள் மாறல், 15-ம் நாள் மாறல், 30ம் நாள் மாறல் என வருவதாக நம் நூலில் கூறப்பட்டிருக்கிறது.

இதனைக் கீழ்க்கண்ட பாவால் அறியலாம்.

"வேறாகி யொருநாடான் மாறிக் காணல்
விளங்கிரண்டு நாள்மாறிச் சுரமுண் டாதல்
நாறாகி மூன்றநாள் நால் நாள் மாறல்
நலத்தைவைந்து நாண்மாற லர்த்த ராத்திரி
பாறாகி வருதல்பதி னைந்துநாண் மாறல்
பகர்ந்தவொரு மாதந்தான் மாறிக் காணல்
வாறாகி வாதபித்த சேட்பங் கூடி
மருவிநின்ற சுரந்தானு * மாகீக மாமே"

ஆகிகம் என்றால் நாள் என்று பொருள்.

ஆங்கில முறைப்படி கொசுக்கடியினால் இரத்தத்தை விஷமிக்கின்ற (Malarial parasites) கிருமிகள் மூன்று அதாவது

1. Plasmodium vivax இதனால் சுரம் 48 மணிநேரத்திற்கு ஒரு தரம் வருகிறது இதை B. T. Malaria என்பர்.

2. plasmodium Malaria இதனால் சுரம் 72 மணி நேரத்திற்கு ஒரு தரம் வருகிறது இதனை Quartan Malaria என்பர்.

3. plasmodium Falciparum இதனால் சுரம் 48 மணிநேரத்தில் வருகிறது. இதனை Malignant Tertian அல்லது Sub-tertian Malaria என்பர்.

இச்சுரத்தில் காணும் குறி குணங்கள்:—சுரம் விட்டு விட்டு வருதல், குளிர், அவயவங்கள் நடுக்கல், தலைவலி, அரோசகம், குளிர் ஏற்படும்பொழுதே வாந்தி, சுரம் தோன்றுவதற்கு முன் சிலருக்கு அடிக்கடி நீரிறங்குதல், வலப்பாட்டீரல், இடப்பாட்டீரல் வீக்கம் முதலியவைகளாம்.

வலப்பாட்டீரல், இடப்பாட்டீரல் வீக்கம் உண்டாகும் என்பதைக் கீழ்க்கூறப்பட்ட செய்யுளால் அறியவும்.

" குறிஞ்சி வருநிலத்திற் கொற்றமுண்டி ரத்தம்
உறிஞ்சி வருசுரமு முண்டாம்—அறிஞரைக்
கையமே தங்குதரத் தாமைவல்லி யுங்கதிக்கும்
ஐயமே தங்கு மறி."

மேலும் இச்சுரத்தில் நாவரட்சி, நாபிளப்பு முதலியவைகளும் காணும் என்பதைக் கீழ்க்கண்ட மேற்கோளால் தெரிந்து கொள்க:—

" இப்படி சுரங்கள் கண்டாலெளிதல்ல வேகமுண்டாய்
அப்பற நாவரண்டக் நாவினிற் பிளப்புங்காணும்
வெப்புறமிச் சுரங்கள் மேவிடாத கலவேண்டில்
மெய்ப்படி பாஷாணத்தால் மீள்வது திண்ணந்தானே."

மேலும் இச்சுரம் அடிக்கடி வந்திருக்குமானால் அதனாலரத்தம் குறைந்து பாண்டு, காமாலையும் உண்டாம்.

அஷ்டவித பரிட்சை:—

நாடி:—வாதம் மிகுதிப்பட்டு காணும்

ஸ்பரிசம்:—சுரம் வரும்பொழுது குளிர்ச்சியாயும் பிறகு வெப்பமாயு மிருக்கும், வயிற்றின் இரு பக்கத்தில் அழுத்திப் பார்த்தால் மண்ணீரலும், கல்லீரலும் மலர்ந்திருக்கும்.

நா:—வரண்டு, பிளவுபட்டிருக்கும்.

நிறம்:—வாத, பித்த, கபதேகங்களைப் பொருந்தி யிருக்குமென்றாலும், இரச, இரத்ததாது கெடுதி அடைவதால்வெளுப்பாயிருக்கும்.

மொழி:—சுரத்தால் வருந்தின நாட்களைப் பொருத்தும், நோயினன் உடல் வலிவைப் பொருத்துமிருக்கும்.

விழி:—சிவந்திருக்கும். இல்லையேல் வெள் விழி மஞ்சளித்து இருக்கும்.

மலம்:—சில சமயம் கழிச்சல், சில சமயம் பந்தம் ஏற்படும். மேலும் கல்லீரல் அதிகமாக மலர்ந்திருப்பின் மலப்போக்கும்; மண்ணீரல் அதிகமாக மலர்ந்திருப்பின் மலச்சிக்கலும் உண்டாகும்.

மூத்திரம்:—மஞ்சளாயிருக்கும். முன்பு, சுரம் தோன்றுவதற்கு முன்பு நீர் அதிகமாக அடிக்கடி இழியும் என்றுகூறப்பட்டிருக்கிறது. அப்படி அதிகமாக இறங்கினால் அசாத்தியம் என்பதைக் கீழ்க்கண்ட மேற்கோளால் அறியலாம் அது,

" சுரமேனும் மேகத் தனியேனு மிருக்கில்
பெருகிய மூத்திரம் பிரிக்கும் உயிரையே." என்பது.

தீரும் தீராதது:—

" மெய்ப்படி பாஷாணத்தால் மீள்வதுதிண்ணந்தானே" என்று கூறி யிருப்பதால் எல்லா வகை குளிர்சுரங்களும் தீர்வன என்று பெறப்பட்டது.

மருத்துவம்:—

வெள்ளைப்பாஷாணம், தாளகம், கௌரி முதலியவைகளால் செய்யப்பட்ட மருந்துகளை உபயோகிக்கும்படி சித்த நூற்கள் கூறுகின்றன.

வெள்ளைப் பாஷாண பற்பம் அரிசி எடை குளிர்ந்த நீரில் அநுபானித்துக் கொடுக்கலாம்.

சுரத்திற்குப் பாஷாணக் குளிகை (அக. பரிபூரணம் 400)யும், குளிர் காய்ச்சலுக்குப் பாஷாண உருண்டை (அக. வைத்திய காவியம் 1500)யும் தேனில் நன்றாக இழைத்துக்கொடுக்கலாம். அதற்கு அநுபானமாகக் கீழ்க்கண்ட சரக்குகள் சேர்ந்த குடி நீரைக்கொடுக்கலாம்.

சிறு தேக்கு, பர்ப்படாம், கோரைக்கிழங்கு, சீந்திற் தண்டு. நன்னாரி, சிறுநாஞ்சொறி, தேவதாரு, கோட்டம், பேய்ப்புடல், சுக்கு வகைக்கு 1 பலம் இடித்துப் பானையிலிட்டு 2 படி தண்ணீர்விட்டு முறைப்படிக்காய்ச்சி 6 வேளை கொடுக்கப்போகும்.

ஆனால் ஆங்கில முறைப்படி கொய்னா (Quinine) கொடுத்தால் நோயாளிக்கு உடனே சுகம் கிடைக்கின்றது. அதுபோல் இந்திய மருத்துவத்தில் மருந்துகள் இருக்கக்கூடும். ஆனால் எல்லோருக்கும் தெரியாது. தெரிந்த பெரியோர் பலர் இருப்பாராதலின் நான் இம் மருத்துவப்பொழில் வாயிலாக அவர்களை அவர்கள் உபயோகப் படுத்தும் மருந்தையும் அதன் செய்முறையையும் அநுபானத்தையும் இப்பொழில் வாயிலாகவே வெளியிட்டு உலகத்தில் குளிர்சுரத்தால் வருந்தும் பலருக்கு நன்மைசெய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சில முறைகள் 1942-ம் வருடக் கடைசி இதழில் 'குளிர் சுரத்திற்கு மாத்திரைகள்' என்ற தலைப்பின்கண் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவற்றை செய்து உபயோகப்படுத்தினவர்கள் மருந்தின் பலனை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

---

## விண்ணப்பம்

இம் மருத்துவப்பொழிலை வாசிக்கும் மருத்துவ நேயர்களாவது மருத்துவ மறிந்த மற்றைய நேயர்களாவது தாமறிந்த அரிய மருத்துவ விஷயங்களை இப்பொழிலின் வாயிலாக பிரசுரித்து உலகிற்கு உதவுமாறு வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

து. ம. இராஜா ஜெகதீசன்,

பிரசுரிப்பவர்.

# வெள் வங்கம்

Dr. R. தியாகராஜன், L.I.M.

இது வெள்ளீயம், வெண்ணாகம், குடிலம், தவள வங்கம், சுவேத வங்கம், பாண்டீ, மாரசம் என்ற வேறுபெயர்களினாலும் வழங்கப்படு கின்றது. இஃது இருவகைப்படுமென்பர் வடநூலார். அவை, 1. குரகம்; 2. மிஸ்ரகம் என்பன. குணத்தில் சிறந்த குரகம் வெண்மை நிறத்தையும், பளு, நயப்பு, நெய்ப்பு, பரிச உணர்ச்சிக்குக் குளிர்ச்சி, விரைவில் உருகல், ஓசையின்மை முதலிய குணங்களை யுடையதாயிருக்கும். மிஸ்ரகம், குரகத்திற்குத் தாழ்ந்த குணமுள் ளது. வெளுப்புங் கறுப்புங் கலந்த நிறமுடையது, இதனை மருந்தில் உபயோகிப்பதில்லை.

வெள் வங்கத்திற்குக் கைப்புச் சுவையும் வெப்ப வீரியமும் கார்ப்புப் பிரிவும் உண்டு. இதற்கு கிருமிநாசனிச் செய்கையும், சமனகாரிச் செய்கையும், துவர்ப்பிச் செய்கையும், வீக்கமுருக்கிச் செய்கையுமுள. இதன் பொதுக் குணத்தைக் கீழ்க்கண்ட செய்யுள் உணர்த்தும்.

தாகங் கரப்பான் சலமேகம் பித்தகப
மேகமொளி மங்கல் வெப்புபலம்—மாகிரந்தி
துள்ளிய மந்தார சுவாசமுமந் தாக்கினியும்
வெள்ளீயம் போக்கும் விதி.

(பொ-ள்) தாகநோய், கரப்பான், சலப்பிரமேகம், பித்தகப தொந்தம், மேகம், தேஜசு குன்றல், சுரம், துர்ப்பலம், கிரந்தி, மந்தார சுவாச காசம், அக்கினி மந்தம் இவைகளை வெள்ளீயம் நீக்கும்.

நிற்க, மேற்கண்ட நோய்களை நீக்க இதனைச் சுத்தி செய்யாது மருந்தாக்கி உபயோகித்தால் நஞ்சாகு மாதலினால் சுத்தித்துக் கொள்க. சென்ற இதழில் யாம் கருவங்கத்திற்குக் கூறிய சுத்தி முறைகளே யிதற்கு மொக்கு மாதலின் ஈண்டுக்கூறாது விடுத்தனம்.

### வங்க பற்ப முறையும் அதன் ஆட்சியும்

படலிகையாங் கோவைவரை பட்சமைமுன் பாண்டீ
படலிகையாங் கோவையனு பானம்—படலிகையாங்
கிரந்தே மையங் கிலாலங்கா மன்மரிசங்
கிரந்தே மையமிது கேள்.

### பற்பம்

(பொ-ள்) படலிகை—பெரும் பீர்க்கின் சமூலச்சாறு, ஆம்—வெள்ளரிச் சமூலச்சாறு, கோவை—கோவைச் சமூலச்சாறு இவை கள் ஒவ்வொன்றிலும் பின் வரும் விவரப்படிக்கு அரைத்தும், உலர்த்தியும் புடமிட நற்குண விசேடம் பொருந்திய பற்பமாகும்;

| சாற்றின் பெயர் | அளவு பலம் | அரைப்பு நாள் | உலர்த்தும் நாள் வில்லை | கவசம் | புடம் வரட்டி |
|---|---|---|---|---|---|
| பெரும்பீர்க்கு | 4 | 15 | 14 | 1 | 60 |
| வெள்ளரி | 3 | 10 | 9 | 1 | 40 |
| கோவை | 2 | 5 | 4 | 1 | 20 |

## மருந்தளவு, நாளளவு, துணை மருந்தும் பிணி நீக்கமும்.

வரை-துவரையின் (அளவு), பட்சம்-(பிணியாளி கொள்ளவேண்டிய நாள்) பதினைந்து, ஐ முன்-வாதாதி கோடக் கிரமங்களுள் கடையில் வரப்பட்ட சேட்பத்தை முன்னமைத்து எண்ணுகையில் வரப்பட்ட சேட்பம், பித்தம், வாதப் பிணிகட்கும், அவைகளைச் சேர்ந்து வரப்பட்ட பிணிகளுக்கும், பாண்டீ-வெள்ளீய பற்பம் எப்படியென்றால், ஆம்-தேகமென்கிற வீட்டிற்குள் முப்பிணிகளாகிய சோரர்கள் புகாமற்படிக்குத் தடுக்க, படலிகை-மூடி என்கிற கதவாகவும், கோவை-(ஒரு கால் மீறின் அவைகளை யொழித்துத் தேகத்தை) ஒழுங்குபடுத்தும் (வீரனாகவும்), அனுபானம்-இசைவான அனுபான மெதுவெனில், படலி-முன் முதனிலைப்படுத்திய கபப்பிணிக்குத் துளசியிலைச்சாற்றிலும், கை-கபத்தில் வாதந்தொந்தித்துண்டான மகோதர உப்புசம், நீரேற்றம் இவைகட்குக் கையாந்தகரைச்சாற்றிலும், ஆம்-கபத்தில் பித்தம் தொந்தித்துண்டான பித்த சன்னி, பித்த சோபை, பெரும்பாடு முதலிய பிணிகட்குக் கடுகிலைச்சாற்றிலும், கீரம்-தனிப் பித்தமான பைத்திய ரோகத்திற்குப் பாலிலும், தேம்-பித்தகப தொந்தமான உன்மத்த சன்னி, மரண மூர்ச்சை வாயு வென்னும் இவைகட்குத் தேனிலும், ஐயம்-பித்தவாத தொந்தமான பித்தவாத வெப்பம், பித்தவாத மார்பு வலி, பித்தகாரக வெட்டை, பித்த உஷ்ணாதிசாரம் இவைகட்கு வெண்ணெயிலும், கிலாலம்-தனிவாதத்தினாலுண்டாம் பிணிகட்கெல்லாம் குளிர்ந்த நீரிலும், காமன்-வாதபித்த தொந்தத்தினாலுண்டாகும் வாத பித்தசுரம், விக்கல், பித்த சூலை, வாதானலசுரம், வாதவல்லை, பெருவயிறு, வாத பித்த முளை மூலம், வாத பித்த சி மூலம் இவைகட்குத் திப்பிலி ரசத்திலும், பரிசம்-வாத கப தொந்தத்தினாலுண்டாம் கைகால் அசதியுள்ள வாதசன்னி, பந்தமென்கிற பிடிப்புடன் கூடிய வாத நீர்க்கோவை, மரம்போல் மரத்துப்போன "தன்மவுடிகாணிலம்" என்கிற வாதம், பக்க வாயுவுடன் கூடின ஒரு தலை நோய், மகோதரச்சூலை, பாரிச வாதப்பொருமலான பிராந்தி நோய் இவைகட்கு மிளகின் ரசத்திலும் அனுபானித்துக்கொடுக்க வேண்டு மென்பதேயாம்; (மேற்கண்ட பிணிகளன்றி வேறு ரோகங்கள் வருமேயானால்), ஐயம்-(அவைகளை எப்படி அறிந்து தீர்க்கப்போகிறோமென்று) சந்தேகங்கொள்ளாமல், கீர்-(நோயாளி பேசும்) பேச்சின் ஒலியையும், அம்-(அவனுடைய) நீரையும், தேம்-(அவன் குடியிருந்து வாழும்) இடத்தின் (தன்மையையும்) இது-இப்படிப்பட்ட எண் வகைத் தேர்தலில் மேற்சொன்னவை

நீங்க மற்றவைகளின், கேள்-சம்பந்தத்தைக் கொண்டறிந்து இப்பற்பத்தைத் தக்க வனுபானத்தில் பிரயோகிப்பாய் என்பதேயாம்.

அளவு "துவரை" என்று கூறியதால் கால் கூறு உத்தமம், அரைக்கூறு மத்திமம், முக்கால் கூறு அதமம், முழுக்கூறு அதமாதமம் என்று கொள்க.

கொள்ளும் நாள் ஒரு பட்சம் என்றதனால் உத்தமம் ஒருபட்சம் மத்திமம் இரண்டு பட்சம், அதமம் மூன்று பட்சம், அதமாதமம் நான்கு பட்சமென்று மறிக.

நிற்க, மேலே குறிப்பிட்ட நூலாசிரியருடைய கருத்தைப்போலவே மற்றைய நூலாசிரியர்களும் வெள் வங்கத்தின் அருமையையும் பெருமையையும் பாராட்டிக் கூறியிருத்தலைக் கீழ்க்கண்ட செய்யுட்களால் அறிக.

"காவள வங்கத் தவளத் தருமையை
நாவள வென்று நவிலுதற் கம்மம்மா
கோவள மாகுங் குடர்வாதம் போகுஞ்சி
காவள மாகுங் கடுங்காற் பிணிகட்கே."

(திருமூலர் திருமந்திரம்)

"வெள்ளிய பர்பமெய்ப் புற்றுக் குள்ளே
மேக வளிப்பிணி யாதியான
துள்ளு மெலிகளைக் கொல்ல வந்து
தோன்றிய தாமென் றூடாய் பாம்பே."

(பாம்பாட்டிச்சித்தர் நேரிசைப்பா)

"வெண்மை வங்கமடி — யகப்பேய்
மேலான மூலியடி யது
வண்மை மெய்க்குறுதி தன்னை
வாடிக்கை தேடுமடி — யகப்பேய்." (அகப்பேய் சித்தர்)

வெள் வங்க பற்ப மகிமை

வெள் வங்க பற்பத்தினைச் சிறப்பாகத் தொண்டையையும் கீல்களையும் பற்றிய கப நோய்களுக்குக் கொடுக்க நற்பலனை யளிக்குமென்பதனைக் கீழ்ச்செய்யுளும் அதன் உரையும் விளக்கு விக்கும்.

பாண்டுவங்கக் கூடா படரவொட்டா வாரபந்தப்
பாண்டுவங்கக் கூடாமெய் பண்பாகப் — பாண்டுவங்க
வெள்ளத்தை யேயநுகர் மேலேயுல் லாபமெனும் •
வெள்ளத்தை யேயடைதி மெய்.

(பொ-ள்) பாண்-வீணை முதலிய கருவியின் இசைபோல மிடற்றின் ஓத்தாசையால் இசை பாட, துவங்க-ஆரம்பஞ் செய்வதற்கு, கூடா-வாதமும் கபமும் ஒன்றுகூடி நெஞ்சு முதல் அண்ணம் வரை நீர்கொண்டு குரற் கம்மல், இருமல், தும்மல், தொண்டைக்கட்டு முதலிய பிணிகளை விளைவித்ததனால் கூடாத, படரவொட்டா—மேலும்

கபம் வாதத்துடன் சிக்கிக்கொண்டு கீல்களில் தங்கி நடக்க வொட்டாமற்படிக்கு இரண்டு பாதங்களிலும் வலியை உண்டாக்கி, வாரபந்தம்-சிறிதளவேனும் நீரை வெளிவர வொட்டாமல் அடைத்துக்கொண்டு மிகு வுபத்திரவத்தைக் கொடுக்கும், பாண்டு—முன்னாளிலிருப்பதான, வங்கு—வளைந்த, அக்கு-எலும்பு நரம்புகளினது சந்துக்கட்டான, ஊடாம்மெய்—உள்ளிடங்களிலிருந்து கபம் வெளிப்பட்டு தேகம் செம்மைபட வேண்டுமானால், பண்பாக-இலட்சணப்பழுது சிறிதுமின்றி முடித்த, பாண்டு வங்கம்-வெள் வங்கத்தின், வெள்ளத்தை—பற்பத்தை, எய-பக்குவமாய்ப் பகர்ந்து தக்க அனுபானத்தில், நுகர்—நீ புசிப்பாயே யாமாகில், மேலே—பின்னாலே அனுபோகத்தில், உல்லாபமெனும்-உற்றநோ யொழிந்ததெனும் உள்ளக்களிப்பாகிய, வெள்ளத்தையே-பரமானந்த சாகரத்திலே மூழ்கி இன்பத்தை, அடைதி-அக்கணமே யடைவாய், மெய்-இது உண்மை ஆகையால், நீ யிதை நம்பி நடந்து கொள்வாயாக என்றவாறு.

மற்றும், இவனுக்கு ஒப்பான வெள்ளீய பற்பம் சுரமுதலிய நோய்களை ஓட்டி உடம்பை வளர்விக்கும் என்பதனை "சுரமுதலா நோய்போந் துளிர்க்கு முடம்பு; மானிகர் வெள்ளீய பற்பத்தாலே" என்ற வடிகளால் உணர்க.

## வெள் வங்க பற்பம் (வேறு)

வாலை ரசம் மூன்று கழஞ்சு, வெள் வங்கம் மூன்று கழஞ்சு இரண்டையும் நன்றாய்த் தொந்தித்துக் கல்வத்திலிட்டு கற்பூர சிலாசத்து மூன்று கழஞ்சு கூட்டி சுண்ண நீரால் அரைத்துப் பில்லை தட்டிக் காயவைத்துப்பின்பு ஓட்டிலிட்டுச் சீலை செய்து முப்பதெருவில் புடமிட்டு ஆறிய பின்னெடுத்துச் சுண்ண நீரால் இரண்டு சாமம் நன்றாயரைத்து ரவியில் உலர்த்தி ஓட்டிலிட்டுச் சீலை மண் செய்து ஐம்பதெருவில் புடமிட்டெடுக்க மல்லிகைப்பூ நிறம்போல் வெண்மையாம்.

அளவு:—பணவெடை.

அனுபானம்:—உலர்த்திய மாதுளம்பூ விதழ், சீரகம் சமவெடை கூட்டிய சூரணம் 4 பணவெடையுடன் நெய் கலந்து கொள்ளவும்.

தீரும் நோய்:—நவமூலம் தீரும். நாடிகள் வலுத்து தாது உண்டாம்.

பத்தியம்:—உளுந்து, மொச்சை, பூசனி நீக்கவேண்டும்.

## வேறு

நொச்சியிலைக்கற்கத்தில் ஈசல் இறகுபோல் தட்டிய வெள்வங்கத் தகட்டைச் சிறு துண்டுகளாகக் கத்தரித்து, புதைத்துச் சீலைசெய்து கனபுடமிட்டெடுக்க வங்கம் சோளப்பொரிபோல் பொரிந்து யிருக்கும் அதை எடுத்து நொச்சி ரசம் விட்டு அரைத்து சிறு பில்லைகளாகச்செய்துலர்த்தி முறைப்படி புடமிட்டெடுத்து உபயோகிக்கவும்.

(தொடரும்)

# திருவிதாங்கூர் மருத்துவர்கள் பதிவுச்சட்டம்

நாட்டில் மக்கள் நோயில்லாது நீண்டநாள் வாழவேண்டுமாயின் போலி வைத்தியர்களும், போலிப்பட்டத்தைப் பூண்ட மருத்துவர்களும், பொருளீட்டுவதற்காகவே வைத்தியப் பள்ளிகளை ஏற்படுத்திப் பட்டம் வழங்குபவர்களும், கடிதப்போக்குவரத்தினால் வைத்தியப்பட்டம் வழங்குபவர்களும், வைத்தியத்தை ஏற்றவளவு போதிக்காத கல்லூரிகளும் முதலில் விலக்கப்படவேண்டும். அரசாங்கத்தார் நாட்டு மக்கட்டொகைக்குத் தேவையான வைத்தியர்களைப் பயிலுவிப்பதற்கு ஏற்ற சிறந்த கல்லூரிகளை ஏற்படுத்தி அங்குத் தகுந்த ஆசிரியர்களை நியமனம் செய்து தகுந்த மாணக்கர்களைச் சேர்த்துச் சரிவரப் பயிற்சியளித்து அவர்களைச் சட்டமூலம் யோக்கியதை பெற்ற வைத்தியர்கள் என்று பதிவு செய்தல் வேண்டும். அவர்களைத் தேவையான விடங்களில் நியமனம் செய்தல் வேண்டும். அப்படிப் பதிவு செய்யப்படாதவர்களை வைத்தியம் செய்யா வண்ணம் அரசாங்கத்தார் தடை செய்ய வேண்டும். அப்பொழுதுதான் மக்களுக்குச் சிறந்த வைத்திய உதவி கிடைக்கும்.

மேலே கண்ட நோக்கங்களை அனுஷ்டானத்தில் கொண்டுவருவதற்குத் திருவிதாங்கூர் அரசாங்கத்தார் ஒரு சட்டத்தை நிறைவேற்றியுள்ளார்கள். அந்தச்சட்டமானது ஏனைய சமஸ்தானங்களிலும், பிரிட்டிஷ் மாகாணங்களிலும் இதுவரை ஏற்பட்டுள்ள வைத்திய சட்டங்களைக் காட்டிலும் சில அம்சங்களில் மிகவும் சிறந்ததாக விளங்குகின்றது. அவற்றுள் முக்கியமானவை:—

(1) ஆயுள்வேதம், சித்தவைத்தியம், யூனனி முறை, ஹோமியோபதி முறை, மேனாட்டு முறை, பல் வைத்தியம் ஆகிய வைத்திய முறைகளைக் கையாண்டு வரும் வைத்தியர்கள் எல்லோருக்கும் ஓரே பதிவு இருக்கவேண்டுமென்பதும்;

(2) இச்சட்டம் அமுலுக்கு வந்தபிறகு ஒரு ஆண்டிற்குள் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளாத எந்த வைத்தியரும் வைத்தியத்தொழில் செய்தல் கூடாது என்பதும், மீறிச்செய்தால் சட்டப்படி தண்டனை விதிக்கப்படுவார்கள் என்பதும்;

(3) போலி வைத்தியப்பள்ளிகளும், கடித மூலம் வைத்தியப் பட்டமளிப்பவர்களும் விலக்கப்படுவார்களென்பதும்;

(4) பொய்ப்பட்டம் தரித்து மக்களை ஏமாற்றுபவர்கள் தண்டிக்கப்படுவார்களென்பதும்;

(5) இச்சட்டத்தின்கீழ் பல் வைத்தியர்களும் பதிவு செய்து கொள்ளவேண்டுமென்பதுமாம்.

இச்சட்டமானது மக்களின் சுகாதாரத்தை நாடி வைத்திய முறைகளில் தேர்ச்சி யடைந்த பல மருத்துவப் பெரியோர்களால் ஆக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள சில அங்கங்கள் மிகவும் போற்றத்தக்கவை ஆயினும் யாம் ஒரு விடயத்தைப்பற்றி மட்டும் ஈண்டுக் குறிப்பிட விரும்புகின்றோம். திருவிதாங்கூரில் ஆயுள் வேத முறையும் சித்த முறையும் பல நூற்றாண்டுகளாகக் கையாளப்பட்டு வருவனவோடு மக்களில் பெரும்பாலோர் அம் முறைகளையே விரும்புகின்றார்கள். அம்முறைகளில் பரம்பரையாக மிகவும் தேர்ச்சி யடைந்த வைத்தியர்கள் அநேகர் இருப்பதாகவும் தெரிகின்றது. அவ்வாறு இருந்தும் இச்சட்டப்படி ஏற்படுத்தப்படும் மருத்துவசபை (Medical Council) யின் அங்கத்தினர் பதினேழு பேர்களுள் ஒன்பதுபேர் மேனாட்டு முறையைக் கையாளுபவர்கள் எஞ்சிய எண்மர் ஆயுள் வேதம், யூனானி, சித்த வைத்தியம், ஹோமியோபதி, பல் வைத்தியம் ஆகியவற்றுள் தேர்ச்சி யடைந்தவர்கள். நம் நாட்டு மக்களின் உடலுக்குப் பொருத்தமானதும், நம் தேச மக்கள் பெரும்பாலும் விரும்புவதும், நம் மக்களின் பொருளாதார நிலைக்குத் தகுந்தவாறு இருப்பதுமாகிய நம் நாட்டு வைத்திய முறைகள் விருத்தி யடைய வேண்டுமானால் அம்முறைகளில் தேர்ச்சி யடைந்த வைத்தியர்களுக்கே பெரும்பான்மை அங்கத்தினர் பதவி கிடைக்கவேண்டியது அவசியம் என்பது யாம் கூறாமலேவிளங்கும். ஏனெனில் தற்காலத்தில் ஒரு சபையின் நோக்கம் அச்சபையிலுள்ள பெரும்பாலான அங்கத்தினர்களின் அபிப்பிராயத்தைப் பொருத்தல்லவோ நிற்கின்றது?

நாட்டு வைத்தியத் தொழிலின் முன்னேற்றத்தைக்குறித்து இந்தச் சட்டத்தை மிகவும் தெளிவான முறையில் நிறைவேற்றிய திருவிதாங்கூர் மகாராஜா அவர்களுக்கும், பொது மக்கள் நன்மைக்குப் பெரும்பாலும் பாடு பட்டு வருபவரும், பரந்த நோக்கமும் ஆழ்ந்த கருத்தும் உள்ள திவான் சச்சிவோத்தம சர். சி. பி. இராமசாமி ஐயர் அவர்களுக்கும், இந்தச்சட்டத்தை மிகவும் விளக்கமான முறையில் தயாரித்தவரும், பொதுவாக இந்திய வைத்திய முறைகளையும் சிறப்பாகத் தமிழ் முறையையும் பாராட்டி அவற்றின் மேம்பாட்டிற்கே, தம் காலத்தைக் கழித்து வருபவருமான ராவ்பகதூர் டி. எஸ். திருமூர்த்தி அவர்களுக்கும் எமது நன்றி யறிதலான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்த சட்டத்தை மற்றைய சமஸ்தானங்களும் மாகாணங்களும் பின் பற்றினால் வைத்தியத் தொழில் சீர்பெற்று மக்களுக்கு உண்மையாகவே பேருதவியாயிருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.